செய்தி வெளியீடு எண் : 17 நாள் : 14.12.2020

**தேனி மாவட்டம்**
**போடிநாயக்கனூர் ஏலக்காய் விவசாய சங்கத்தினர்களின் கோரிக்கைக்கிணங்க,**
**ஏலக்காய் மின்னணு வர்த்தக மையத்தில்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**நேரில் ஆய்வு மேற்கொண்டார்:-**

*******

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டத்திற்குட்பட்ட ஏலக்காய் விவசாய சங்கத்தினர்கள் நறுமணப்பொருட்கள் வாரியம் மூலமாக நடைபெற்று வரும் ஏலக்காய் மின்னணு வர்த்தகம் (E.Action) தொடர்பாக, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர். அக்கோரிக்கையின்மீது நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இன்றைய தினம் (14.12.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் சம்மந்தப்பட்ட ஏலக்காய் மின்னணு வர்த்தக மையத்தில் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

போடிநாயக்கனூர் பகுதியில் நறுமணப்பொருட்களை ஏலக்காய் வாரியம் மூலம் மின்னணு வாயிலாக வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களிலும் மற்றும் செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களில் கேரள மாநிலம் புத்தடி பகுதியிலும் ஏலம் மேற்கொண்டும் விவசாய சங்கத்தினர் வியாபாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த மின்னணு வர்த்தகத்தில் ஏல பணிகள் மேற்கொள்வதற்கென ஏலக்காய் வாரியம் மூலம் 62 நபர்கள் கலந்து கொள்ளும் வகையில் 62 மேஜைகள் நடைமுறையில் முன்னதாக இருந்தது வந்தது. தற்சமயம் கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக அதன் பரவலைக் கட்டுப்படுத்திடும் பொருட்டு, 45 மேஜைகளில் மட்டும் காலை, மாலை இரண்டு வேளையும் ஏலம் நடைபெற்று வருகிறது.

தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை, தடுப்பு நடவடிக்கைகளின் காரணமாக தற்சமயம் கொரோனா நோய்த்தொற்றின் எண்ணிக்கை மாவட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது முன்னதாக நடைமுறையில் இருந்த 62 மேஜைகளுடன் மின்னணு வர்த்தகம் மூலம் ஏல பணிகளை மேற்கொள்ள அனுமதி வேண்டி, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களிடம் ஏல விவசாய சங்கத்தினர்கள் கோரிக்கை விடுத்தனர். அதனடிப்படையில், இன்றைய தினம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் சம்மந்தப்பட்ட இடத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது ஏல விவசாய சங்கத்தினர்கள் தற்சமயம் எதிர்கொள்ளும் நடைமுறைகள் குறித்து சம்மந்தப்பட்ட நிர்வாகிகளிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார். முன்னதாக இருந்த நடைமுறையை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து, பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்வதாக அவர்களிடம் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வின்போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) விஷ்ணு ராம் மேத்தி, ஏலக்காய் மின்னணு வர்த்தக மைய உதவி இயக்குநர் ரெங்கநாதன், மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**